**சியம்பலாண்டுவ பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ் அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சியம்பலாண்டுவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செலவிடப்பட் ரூபா 451,100 ஆன மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் கணக்கிலுடும் போது இவ்வாறான குறைபாடுகளை தவிர்க்க தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 172,923,500 தொகையான காணி மற்றும் கட்டிடம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை மற்றும் உரித்துறுதி ஆவணங்களும் ரூபா 5,268,853 ஆன பொது வைப்பு மீதிக்குரிய நாளதுவரையாக்கப்பட்ட பொது வைப்புப் பதிவேடும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறையான மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளவும் பொது வைப்புப் பதிவேட்டை 2020 இல் திருத்தம் செய்து புதுப்பிக்க |

விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக அறிய தருகின்றேன்.

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்ளுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) 134 (i) ஆம் பிரிவு | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களைக் கண்டறிந்து வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சியம்பலாண்டுவ பிரதேச சபை பிரதேசம் வீதவரி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட அவசியமான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன். |
| (ii) 149 பிரிவு | இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டு அல்லது அச்சபையினால் அனுமதிக்கப்பட்ட பிரதேச சபைக் கட்டுப்பாட்டு பிரதேசத்திலுள்ள ஹொட்டல் மற்றும் தங்குமிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந் நடவடிக்கை ஒழுங்கு முறைப்படி நடாத்த உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 39 ஆம் பிரிவ்ு | தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முன் வைக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்விற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இலக்கம் 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 39 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இச செயற்பாட்டை முறைப்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக் கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | சபை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 2004 ஆம் ஆண்டிற்கு முன் இருந்து கணக்குகளிலுள்ள சபையில் சேவையாற்றிய 04 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 34,289 கடன் நிலுவை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஊழியர்கடன் அறவிடப்பட வேண்டும் | இந்த 04 பேரினதும் கடன் கடன் கோப்புகளோ அல்லது பிணையாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதுடன் அக்காலப்பகுதியில் சேவையிலிருந்தோரிட மிருந்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஈ) | 1956 இன் 28 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1915 இன் 19 ஆம் இலக்க வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் | சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களுக்கு ஸ்ரீ அங்கீகாரம் வழங்கவதற்கு கட்டிட திட்டக் குழுவொன்று உருவாக்கப்பட்டிருக்க வில்லை. | கட்டிட திட்டங்களை அங்கீகரிக்க திட்டக் குழுவொன்று உருவாக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது கட்டிட திட்டக் குழுவொன்று உருவாக்க அவசியமான நடவடிக்கைகள் எடுக்குமாறு திட்டமிடல் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,347,178 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,507,159 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகை | 12,820,800 | 11,928,625 | 10,252,533 | 1,847,692 | 15,145,147 | 9,737,317 | 9,851,573 | 38,169 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,782,500 | - | 1,285,100 | - | 1,613,000 | - | 1,793,370 | - |
| (iii) | ஏனைய வருமானம் | 15,980,891 | 4,643,136 | 12,604,342 | 1,347,441 | 9,394,000 | 6,054,351 | 9,562,142 | 2,616,201 |
| | மொத்தம் | 30,584,191 | 16,571,761 | 24,141,975 | 3,195,133 | 26,152,147 | 15,791,668 | 21,207,085 | 2,654,370 |

## 2.2.2 கடை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 39 கடைகளில் அறவிடப்பட வேண்டிய ரூபா 131,639 மற்றும் 2015 சனவரி மாதம் உடைத்து அகற்றப்பட்ட 05 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 36,750 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக இணைக்கக்குழுவிற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | 2013 ஜுன் 28 ஆம் திகதி சபைத் தீர்மானத்தின் படி அதிமலே வாராந்த சந்தையில் அமைந்துள்ள 32 திறந்த கடைகளை மீண்டும் வாடகைக்கு வழங்காமலிருக்க தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 18 கடைகளுக்கு அன்று நிலுவையாக இருந்த ரூபா 71,400 கூலியை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | இது தொர்பாக இணைக்கக்குழுவிற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

### 2.2.3 நீர்க் கட்டண வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 95,688 நிலுவை நீர்க்கட்டண வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2020.05.31 இல் ரூபா 79,012 தொகை அறவிடப்பட்டதுடன் நிலுவை பணத்தை அறவிடுவதற்காக தேவையான நிலுவை அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

### 2.2.4 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 28 செயற்பாடுகளுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படா திருந்தமையால் ஒரு அனுமதிப் பத்திரத்திற்குரிய ரூபா 4000 வீதம் 112,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய தொழில் முயற்சிகளை இனங்கண்டு அனுமதிப்பத்திரம் விநியோகிக்க வேண்டும். | அச்செயற்பாடுகளை நடாத்திச்செல்லும் வவிபார சமூகத்திற்கு அறிவுறுத்தப்பட்டதன் பின்னர் 07 செயற்பாடுகளுக்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.5 வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய வியாபாரங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | 2021 முதல் அனைத்து வியாபார நிலையங்கள் குறித்து ஆவணப்படுத்தப்பட்டு குறித்த நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன் |

**2.2.6 வியாபார மற்றும் கைத்தொழில் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சபைக்குற்பட்ட வியாபார மற்றும் கைத்தொழில் வரி அறவிடப்படாத நிறுவனங்கள் குறித்து மெய்யாய்வு செய்யப்படவில்லை | வியாபார மற்றும் கைத்தொழில் வரி செலுத்த வேண்டிய நிறுவனங்கள் குறித்து மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும் | 2021 முதல் வியாபார மற்றும் கைத்தொழில் வரி செலுத்த வேண்டிய நிறுவனங்கள் குறித்து மெய்யாய்வு செய்யப்பட்டு அறவிடப்பட வேண்டும் |

**2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ஊவா மாகாண சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 249,750 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 4,561,289 அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நிலுவை முத்திரைக் கட்டணங்களில் ரூபா 2,787,343 நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 232,333 தொகையொன்று 2020 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட போதும் எஞ்சிய தொகை அறவிடுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக அறிய தருகின்றேன். |

**2.3 மிகைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் | நிலுவை மிகைக் கட்டணம் அறவிடப்பட | 2020 இல் இந்த நிலுவையில் ரூபா 10,000 இதுவரையிலும் |

| | | |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய தொகை ரூபா 138,017 ஆகும். | வேண்டும். | அறவிடப்பட்டிருந்த தாகவும் முன்னால் இருந்த தலைவரிடமிருந்து அறவிடப்பட இருந்த 110,008.33 மிகுதி மிகைக் கட்டணப் பணத்தை அறவிடுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக அறிய தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | குறிகாட்டிகளை இணங் காண்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அறிய தருகின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 யூன் 05 ஆந் திகதி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட சியம்பலாண்டுவ வாராந்த சந்தையின் 10 கடைகள் மீளாய்வாண்டின் 2020 ஜனவரி 09 வரையிலும் வாடகைக்கு வழங்கப்படவில்லை. | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீண்டும் இக்கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | சபைக்குரித்தான 03 வாகனங்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டாலும் அவற்றை புதுப்பித்து பாவனைக்குட்படுத்த நடவடிக்கை எடுகக்ப்படவில்லை | வாகனங்களை புதுப்பித்து பாவனைக்குட்படுத்த நடவடிக்கை எடுகக்கப்பட வேண்டும் | 2020 முதல் வாகனங்களை புதுப்பித்து பாவனைக்குட்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (இ) | பிரதேச சபையினால் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நிலையத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை | கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நிலையத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும் | 2020 ஆம் ஆணடில் மீள்சுழற்சி முறைமையொன்றை நிறுவி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக அறிய தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளின் பிரகாரம் சபையில் 07 பதவிக்குரிய 08 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் 07 பதவிக்குரிய 22 ஊழியர் மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியதுடன் மிகை ஊழியர் எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். | இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கவும் மற்றும் முகாமைத்துவ் சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கி அனுமதி பெறுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்காக பிரதேச சபைக் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020.08.31 ஆம் திகதிக்கு முன் காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு பதிவேடுகளுக்க உட்படுத்த விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான வெவ்வேறு அளவிலான 08 காணி தொடர்பாக இனங்காணப்பட்ட அளவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அத்தடன் 73 காணிகளின் சட்டபூர்வ உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சபைக்குரிய காணிகளை அளவை அளவீடுகளை மேற்கொண்டு சட்டபூர்வ உரித்தினை கையேற்க வேண்டும். | 08 காணிகளின் அளவிடல் மேற்கொள்ளப்பட்டு சகல காணிகளின் சட்டபூர்வ உரித்தினை கையேற்பதற்காக விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் 140 வீதிகள் இனங்காணப்பட்டிருந்த போதும் வீதி பதிவேடுகளில் நாளதுவகை யாக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிகள் பதிவேடு நாளதுவகையாக்கப்பட்டு வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட வேண்டும். | வீதிகள் பதிவேடு நாளதுவறை யாக்கப்பட்டு நடாத்திச் செல்ல உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன் |
| (ஈ) | இலங்கை வங்கியில் நடாத்திச் செல்லப்பட்ட மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மொத்தம் ரூபா 569,496 ஆன மீதிகள் காணப்பட்ட 03 சேமிப்புக் கணக்குகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன. | செயற்பாடற்ற கணக்குகளின் மீதிகளை பயன்படுத்தப்பட வேண்டும் | இக் கணக்குகளிலுள்ள நிலுவை கிராம எழுச்சி பரீட்சாரர்த்த செயற் திட்டத்திற்கு அவசியமான காரியங்களுக்கு பயன்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரித்தான 4 இயந்திரங்கள் 2019 ஜனவரி 01 முதல் ஆகஸ்ட் 31 வரை ரூபா 776,560 எரிபொருள் செலவில் 958.32 மீட்டர் மணித்தியாலயங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு 74 வேலைகளை பூர்த்தி செய்ததாக நாளாந்த ஓட்டக் குறிப்புக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் அந் நிர்மாணங்களில் வேலை பூர்த்தி அறிக்கைகள் பூரணப்படுத்தப்படாது இருந்ததுடன் 50 நிர்மாணங்கள் தொடர்பான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வாகனங்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | சபைக்குரிய 03 இயந்திரங்கள் 2014 வருடம் முதல் 2019 ஜூலை வரை வாடகைக்கு விடப்பட்டு ரூபா 266,025 கூலி அறவிடப்படவில்லை | நிலுவை கூலி அறவிடப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் போது கூலியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**3.6 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தில் அனைத்து பொருட்கள் வேலைகள் மற்றும் சேவைகள் வழங்கல் உட்படுத்தப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாதிருக்க உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் 02 ஆம் இறுதி காலாண்டுகளில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டு அதன் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் | 2020 ஆம் ஆண்டின் 02 ஆம் இறுதிக் |

| | |
|---|---|
| குழுவொன்றை தாபித்தல் வேண்டும். | காலாண்டுகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டு நடாத்திச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |